| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>பிரபு | அ.வ.எண். 386/2016 | 09.04.2025 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இடம் பிரச்சனை சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளார்கள். எந்த இடம் சம்மந்தமான பிரச்சனை என்றால் புஞ்சைசங்கேந்தி கிராமத்தில் உள்ள இடத்தை பொறுத்த பிரச்சனை ஆகும். மேற்படி இடத்தை பொறுத்த சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்.653/1 ஆகும். மேற்படி சொத்தை தவிர வாதிகள் எந்த சொத்திலும் உரிமைகோரவில்லை என்றால் சரிதான். வாதிகள் வீட்டிற்கு கீழ்புறத்தில் என்ன உள்ளது என்றால் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி உள்ளது. வாதிகள் வீட்டிற்கு தென்புறத்தில் என்ன உள்ளது என்றால் மெயின் ரோடு உள்ளது. மேற்படி வீட்டிற்கும் எந்த திசையில் பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் வடக்கு திசையில் உள்ளது. மேற்படி பிள்ளையார் கோவிலின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) மேற்படி பிள்ளையார் கோவில் உள்ள இடத்தை ஒட்டி தண்ணீர் தொட்டி உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்து சர்வே எண் தவறாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தண்ணீர் தொட்டியையோ பிள்ளையார் கோவில் உள்ள இடத்தையோ வாதிகள் அனுபவம் செய்யவில்லை என்றால் கோவில் தனியாக உள்ளது, அதற்கு அருகில் 10 அடி வாதிகளுக்கு சொந்தமான இடம் உள்ளது. புல எண்.653/1 யை பொறுத்து பிரதிவாதிக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும் கோவில் மற்றும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை ஆக்கிரமிக்க முயற்சி செய்த காரணத்தினால் தான் கோவில் நிர்வாகிகள் அதை தடுத்தார்கள் என்றால்

சரியல்ல. தாவா சொத்தை பிரச்சனைக்குரிய இடத்தில் கீற்றுக்கொட்டகை இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பட்டா தவறாக உள்ளது என்றால் வருவாய் துறையில் மனு தாக்கல் செய்து தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலும் அதை தவிர்த்து பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1,2 வாதிகளின் மகன் எனது நண்பர் என்ற காரணத்தினால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது பொய்சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.